31ம் நாள் நினைவாக..!



ஊர்காவற்றுறை சுருவிலைப் பிறப்பிடமாகவும்
இல. 74 / 1 சிவநகர் உருத்திரபுரத்தை
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர். மாரிமுத்து கந்தசாமி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மஞ்சரி

11.11.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# மாரித்து கந்தசாமி

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

31ஆம் நாள் நினைவு

மஞ்சரி

11.11.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் தலை மகனாக ஒளிதந்து, அன்பைச் சொரிந்து அறிவை ஊட்டி, பார்போற்ற எம்மை வாழ வைத்த எங்கள் தெய்வத்தை இப்பிறப்பில் மட்டுமல்ல எப்பிறப்பிலும் மறக்க முடியாது.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

என்ற கூற்றுக்கு அமைய தன்கடமைகளைச் சரிவரச் செய்ததுடன் சிவத்தொண்டு புரிந்து சிவனடியில் சோதியாய் நிறைந்த எம் அன்புத்தெய்வம்.

அமரர் **மாரிமுத்து கந்தசாமி**

**அவர்களின் பாதக் கமலங்களில் இம்மஞ்சரியை சமர்ப்பணம் செய்கின்றோம்.**

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்







## விநாயகர் துதி

விநாயகனை வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாயென் நெஞ்சந்துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கி
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோகியசுந்தரனே.

## திருப்பல்லாண்டு

குழலொலி  யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யார்க்கு வழிவழியானாய்
மணஞ் செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போது உன்னடியின்
கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறையரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். மாரிமுத்து கந்தசாமி அவர்களின் வாழ்வியல் நோக்கு





இந்து சமுத்திரத்தின் நித்திலமாக விளங்கும் இலங்கைத் தீவின் வடபால் அமைந்த ஊர்காவற்றுறை சுருவில் என்னும் இடத்தின் கண் மாரிமுத்து ஐயாத்தை தம்பதிகளுக்கு கடைக்குட்டிப் பிள்ளையாக அமரர் மாரிமுத்து கந்தசாமி 1943-10-02 அன்று இப்பூவுலகில் அவதரித்தார்.

இளமையிலே சுறுசுறுப்புடைய இவர் தனது ஆரம்பக்கல்வியை யாழ்/வேலணை மத்திய கல்லூரியிலும் பின்னர் விவசாயம் செய்வதற்காக கிளிநொச்சி முரசுமோட்டையில் பெற்றோர் குடியேறியதால் முருகானந்தா கல்லூரியிலும் கல்வி பயின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயத்தை விருப்புடனே செய்த இவர் திருமணப் பருவத்தை அடைந்ததும் புங்குடுதீவு கந்தையா தங்கமுத்து தம்பதிகளின் மகள் சந்திரலேகாவை கரம் பிடித்து இல்லறமாம் நல்லறத்தில் 1965ம் ஆண்டு இணைந்து கொண்டார். அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது என்பதற்கமைய இல்லறமாம் நல்லறத்தை இனிதே நடாத்தியதால் நன்மக்களாக மஞ்சுளா, சிறிதரன், சுகந்தி, நளாயினி (அமரர்), சர்மிளா (அமரர்), குமுதினி, சிறிகரன், தர்சினி, ஜனார்த்தனி ஆகியோரைப் பெற்று வளர்த்தார். தனது கடின உழைப்பாலும் முயற்சியாலும் பிள்ளைகளை ஞானமும் கல்வியும் நயக்க வைத்து அதன் பயனாக இருமக்களை அரச உத்தியோகத்தில் அமர்த்தி இன்புற்றார். தனது பொறுப்புக்களைச் சரிவரச் செய்யும் இவர் மக்களுக்கு துணைகளாக யோகநாதன், பத்மலோஜினி, சதானந்தன், நிருபாதரன், மயூரன், அருளானந்தம் ஆகியோரைத் தேர்ந்தெடுத்து மருமக்களாக மகிழ்ச்சியடைந்தார். கடைசி மகனை கனடாவிற்கு அனுப்பி கஸ்ரங்களுக்கு விடுதலை தேடினார்.

மக்கள் மருமக்களின் இனிய இல்லற வாழ்வின் பேறாக சதனிகா, தசனிகா, பவனிகா, ரதுநிலன், டிலக்சி, லாவண்யா, எழிலருவி, திகழினி, திகழருவி, தாட்சாயினி, துவாரகா, பிரமிஷா ஆகியோரைப் பேரப்பிள்ளைகளாக பெறும் பயன் பெற்றார். பேரப்பிள்ளைகளுடன் கொஞ்சிக் குலாவி இன்பம் அடைந்தார்.

இன்முகமும் இனிய பேச்சும் கொண்ட இவர் **"என் கடன் பணி செய்து கிடப்பதே"** என்ற கூற்றுக்கு ஏற்ப சிவபக்தி கொண்டு சிவதொண்டுகள் செய்யத் தொடங்கினார். அதனால் சிவாலய சமூகம் 1994ம் ஆண்டு தொடக்கம் இவரை சிவாலய முகாமையாளராக நியமித்ததில் இருந்து சிவதொண்டுகளை சிரமேற் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துவந்தார். 1998 இடப்பெயர்வுகளினால் பல இன்னல்களை அனுபவித்த போதும் வணிக நிலையத்தின் காசாளராக இருந்து தனது பணியைக் கண்ணியத்துடன் செய்த பெருமகன். மீள்குடியேற்றத்தின் பின்னர் சிவன் செயலால் மீண்டும் உருத்திரபுரம் சிவாலயத்தின் முகாமையாளர் பதவியை சிவாலய நிர்வாக சபையினரின் வேண்டுதலால் ஏற்றுப் பொறுப்புடன் செய்து வந்தார்.

எழுபத்து மூன்று வயதுகள் ஆனபோதும் இளமையின் துடிப்புடன் கடமையில் கண்ணாயிருந்தார். 2014.10.12 அதிகாலை சிவாலயம் நோக்கி சென்றவர் திடீரென மாரடைப்பால் அவதிப்பட்டார். மக்கள் விரைந்து சென்று வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டியை அழைத்து கொண்டு சென்றனர். வைத்தியர்கள் பலர் காப்பாற்ற எடுத்த முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை.

சிவனடியே சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை என்ற கூற்றுக்கு இணங்க இறை இன்பத்தை ஏற்று இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.

**"வெற்றி என்பது**
**தாகத்துக்கு நீர் போல,**
**உரிய காலத்தில் பெறவேண்டியது,**
**காலம் பிந்திய**
**வெற்றியும் ஒருவகையில்**
**தோல்விதான்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அமரர் மா. கந்தசாமி
## அவர்களின்
## சிவபதப்பேறு

திருச்சிற்றம்பலம்

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடுள்ள நினைவு
ஆயினவே வரம் பெறுவர் ஐயுரவேண்டா வொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
நோய் வினையார் அவர் தம்மைத் தோயவம் தீவினையே

திருச்சிற்றம்பலம்

ஈழத்தின் பெயர் கொண்ட உருத்திரபுரம் நகர் இதுவாகும். பார்கொண்ட நாதனுமாம் உருத்திரபுரீஸ்வரப் பெருமாளின் சீர் கொண்ட நன்னெறியாம் சரியை நெறியைப் பின்பற்றி முத்தி எனும் சிவபதத்தை சீர்கொண்டு பின்பற்றியவர் திருவாளர் மா.கந்தசாமி அவர்கள் தனது கடமையினை நன்றே எக்காலமும் சிரமம் பாராது தனது சிவத்தொண்டே பெருந்தொண்டு எனப் போற்றி தனது கடமையினை ஆற்றியவர். இவர் இறைவனடி சேரும் அந்நாளும் பெருமானைத் தரிசித்து தனது தொண்டாற்றிய பின்னே சிவபத்தை அடைந்த பாக்கியசாலி.

இவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல உருத்திரபுரீஸ்வரர் அருள் புரிவாராக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சத்திஜோஜாத வீரசைவசிவாச்சாரியார்
சாதகமணி.சிவபூஜாதுரந்தரர்
சிவாகம பூசணம்
சிவஸ்ரீ சிவா லம்போதரக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனைவி புலம்பல் . . .!

அப்பனே! என்று அழைக்கும்
என் தெய்வமே!
என்னைத் தவிக்க விட்டு
எங்கு சென்றீர்?
உத்தமரே! உறுதிமிக்க நெஞ்சு உடையவரே!
சேர்ந்தீரோ! சிவனடியை..!
பாதச் சுவடுகள் இங்கு அழியவில்லை
பரமன் பதம் தேடிச் சென்றீரோ
அப்பா என்று ஓடிவரும் உன் அருமை
மக்களுக்கு என்ன சொல்வேன்
கஸ்ரங்கள் பல பட்ட காலம் கழிந்தது
இன்று சொத்து சுகங்களுடன்.........
வாழ்ந்திடும் வேளையிலே...
வானுலகம் சென்றது ஏன்?
புத்தி தடுமாறிப் புலம்புகிறேன்
சித்தம் இதுவோ? – நீர்
சிவனடியை மண்ணுலகப் பற்று இன்றிப்
பற்றியது ஏனோ?
அவனடியே அனைத்துமென
அருள்காட்டிக் கலந்தனையோ
உமதடியில் உள்ளன்பில் உயிர் கசிந்தேன்.



– அன்பு மனைவி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மக்கள் மனக்குமுறல்

அருமைத் தெய்வமே – எங்கள்
ஆருயிர் அப்பாவே...
பெற்று வளர்த்து பெயரிட்டீர்கள்
அணைத்து எடுத்து ஆளாக்கினீர்கள்
அன்பைப் பொழிந்து அறிவூட்டினீர்கள்
இன்பமாய் நாம் வாழ்வதற்கு
இனிய துணை தேடித்தந்தீர்கள்
நல்ல நண்பனாய் அருகிருந்து
புத்தி புகட்டி புதுவழி காட்டினீர்கள்
இடர்பட்ட வேளையில் இன்னல் தீர்த்தீர்கள்
உங்கள் முகம் எங்கள் கண்ணில்.......
என்றென்றும் புன்சிரிப்புடன்......
கற்பக தருவாக நீங்கள் இருந்து
கேட்டதெல்லாம் தந்தீர்கள்.
காலில் விழுந்து ஆசிபெற்றால்
கருணையுடன் வாழ்த்திடுவீர்கள்
காலன் உமைக் கவர்ந்ததேனோ?
கதிகலங்கித் தவிக்கின்றோம்
மீண்டும் எமக்குப் பிறப்புண்டேல்
உங்கள் பிள்ளைகளாய்ப் பிறக்க
வரம் வேண்டுகின்றோம்.
உங்கள் நினைவலைகளில்...!
எங்கள் வாழ்வு மலரும்
கடவுளோடு கலந்து கரையேறி விட்டவரே
கண்ணீர்ப் பூக்களே காணிக்கை.

– மக்கள் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூரத்திலிருந்து துடிக்கின்றேன்...!



அத்தனே! எனை ஆண்ட தந்தையே
மூத்தாக இருந்த நீங்கள் - இன்று
வித்தாகிப் போன மாயம் என்ன?
மத்தாகிசுழல்கிறது என் மனம்
பித்தனாகிப் பிதற்றுகிறேன் இங்கு
செத்தாலும் உங்களை மறவேன்
சொத்து சுகம் தேடி நான்
தொலைதூரம் வந்து விட்டேன்
கஸ்ரப்பட்டு உழைத்து உங்களை
காப்பாற்ற கனவு கண்டேன்
கனவு கலைந்ததிங்கு..
காலன் உமைக் கவர்ந்து விட்டான்
உங்கள் உயிரற்ற உடலோடு கூட
உறவாட முடியாத பாவி நான்
கடைக்குட்டி மகனால்
கடமை செய்ய முடியவில்லை
கதறி அழுகிறேன் - என்
கண்ணீரை யார் துடைப்பார்
தடிகொண்டு அடிக்காமல்
கடிந்து நீர் கூறும் மொழிபோதும்
தொலைந்து போன உங்கள் வாழ்வால்
தொலைவில் இருந்து துடிக்கின்றேன்
கலையாத உங்கள் கோலம்
கண்முன் நிற்கிறது கனவில் வருகிறது
மறுபடியும் மண்மீது பிறப்பிருந்தால்
உங்கள் மகனாகப் பிறக்க வேண்டும்
அப்பா என்று அழைக்க வேண்டும்
அன்பு மழை பொழிய வேண்டும்
மீண்டும் மண்மீது வாரீரே
நான் மகனாகப் பிறப்பதற்கு...

**மகன் க.சிறிகரன்**
**கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மருமக்கள் மனத்துயர்

மண்ணிலே நல்ல வண்ணம்
வாழ்ந்த மாமாவே
கண்ணிலே கருணை வெள்ளம்
பொங்கித் ததும்பிடவே
மருமக்களாய் அன்றி எம்மை
மக்களாய் மதித்தவரே
உற்ற பல நன்மைகள் செய்த
உத்தமரே! எங்கு சென்றீர்
காவிய நாயகனாக இருந்தீர்கள்
ஓவியமாய் இன்று ஆகியதேன்?
பாவிகளாய் எம்மை இங்கு
பரிதவிக்க வைத்துவிட்டு
பரமனடி சேர்ந்தீர்களோ....?



## பேரப்பிள்ளைகள் பெருங்கவலை

தாத்தா.. தாத்தா.. என்று தவிக்கின்றோம்
தனித்திருக்க உங்களுக்குப் பிடிக்காதே
தனியாக எங்கு சென்றீர்கள்...
பேரப்பிள்ளைகள் நாம் பிதற்றுகிறோம்
போன வழி தெரியாது தேடுகின்றோம்
எங்களுக்காய் கொண்டு வரும்
பல்வகைப் பட்சணங்கள் எங்கே தாத்தா?
இனிமேல் தரமாட்டீர்களா தாத்தா?
ஒழித்து ஒழித்து தந்து எம்மிடம்
ஒரு முத்தம் கேட்பீர்கள்
சிரித்து சிரித்து எங்கள் சித்தம்
குளிர வைக்கும் தாத்தாவே
பழங்கதைகள் பலவும் கூறிப்
பாங்குடனே நடித்திடுவீர்கள்
அகரம் சொல்லித் தந்து எம்மை
சிகரமாய் நாம் வாழ வாழ்ந்திடுவீர்கள்
தாத்தா.. தாத்தா என்று ஓலமிடுகின்றோம்
ஒருமுறை வாரீரோ திருமுகம் நாம் பார்க்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சகோதர, சகோதரி பாசம்

ஒரு கொடியில் பூத்த மலர்களாய்
ஒன்பது பேர் பிறந்து வளர்ந்தோம்
ஒரு கூட்டுக்கிளிகளாய் ஓடித்திரிந்து
ஒற்றுமையாய் தான் வாழ்ந்தோம்
காலங்கள் கரைந்தோட எங்கள்
வாழ்க்கை கோலங்கள் காற்றாய் திசைமாற
ஆளுக்கு ஒரு பக்கமாய் அவரவரும்
பிரிந்து சென்றும் மறக்கவில்லை
முதுமை எம் பரிசாக முன்னால் வரும்போது
காலன் எம்மை கவரும் காலமதில்
மூத்தவர் நாம் இருக்க
கடைக்குட்டி நீ முந்தியதேன்..?

## மைத்துனர், மைத்துனி பாசம்

கண்ணியமாக நடந்து கடமைகளை
எண்ணியபடி செய்தவரே!!
நன்றான மனதோடு எங்களை
ஒன்றாய் மதித்தவரே!!
ஆவி விடும் வரையும் என்றும்
வாடி வருந்தாது ஓடித் திரிந்தவரே!!
சவடி இருக்க கொடுத்து வைக்கவில்லை
விண்ணமரும் தெய்வமாக—நீங்கள்
விரைந்து சென்றது ஏன்?
உற்றபல நன்மைகளை எங்களுடன்
உடனிருந்து செய்தவரே!
உன் பிரிவால் உருகியிங்கு
உணர்வு வற்றித் துடிக்கின்றோம்.
உத்தமரே! உயர்வுடன் வாழ்ந்தவரே
உங்கள் வதனம் எங்கள் முன்
என்றும் நிழலாடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெறா மக்கள் பிதற்றுகிறார்...!

அன்னைக்கு அன்னையாய்
தந்தைக்கு தந்தையாய்
அருகில் அணைத்து ஆறுதல் கூறிடுவீர்
தந்தையை நாம் இழந்தபோதும்
தயங்காமல் உம்மிடம் வந்து
எம் குறைகள் தீர்த்திடுவோம்
சித்தப்பா, குஞ்சி அப்பா என்று கூவியழைக்கும்
எங்கள் குரல் கேட்கவில்லையோ
ஆறுதல் தேடும் ஆலமரமாய்
இருந்த நீங்கள் - இன்று
அடியோடு சரிந்தது ஏன்
ஏங்கித் தவிக்கின்றோம் - எம்மைத்
தாங்கி நிற்பார் யார் இனி
பெற்றெடுத்த மக்களைப் போல
பெறாமக்கள் எங்களையும்
அன்பு செய்து ஆதரித்துக் காத்தவரே
இனி யாரிடம் செல்வோம் ஆறுதல் தேடி...!

எத்தனை குழப்பம் நேர்ந்தாலும்
பொய்மை மறைந்து விடும், மெய்மை மேலே
உயர்ந்து நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி.பிறேமா மதுரநாயகம் அவர்களின் இரங்கல் செய்தி

அமரர்.மாரிமுத்து கந்தசாமி அவர்களின் 31ம் நாள் நினைவு குறித்து ஒரு சில வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்கின்றேன்.

அமரர் மாரிமுத்து கந்தசாமி அவர்கள் எமது கல்வி வலயத்திலுள்ள கிளி / சிவநகர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தமிழ்ப்பாட ஆசிரியராகப் பணியாற்றும் திருமதி.மஞ்சுளா யோகநாதன் அவர்களின் பாசமிகு தந்தையார் ஆவார்.

தந்தை மகற்காற்றும் உதவி - அவையத்து
முந்தியிருப்பச் செயல்

எனும் வள்ளுவன் வாக்கிற்கிணங்க தான் பெற்றெடுத்த பிள்ளைகளைச் சீரும் சிறப்போடும் வளர்த்து, உருவாக்கி அவர்களைக் கரைசேர்த்து வைத்தவர். தான் பெற்றுக் கொண்ட கல்வியிலும் பார்க்கத் தனது பிள்ளைகள் கல்வியில் மேலோங்கி நிற்க வேண்டும் என்பதற்காக இரவு பகல் பாராது, தன்னை முழுமையாக உருக்கித் தனது செல்வங்களைத் தலைநிமர வைத்தவர்.

அமரரின் மூத்த மகளான திருமதி.மஞ்சுளா யோகநாதன் அவர்கள் அதிகஷ்ரப் பிரதேசமான அக்கராயன் மகா வித்தியாலயத்தில் நீண்ட காலம் ஆசிரியராகப் பணியாற்றிய காலப்பகுதிகளில் அவரது கல்விப் பணி சிறக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதுணையாகவும் பக்கபலமாகவும் விளங்கியவர். யுத்தக் கொடுமைகளை நித்தம் சுமந்து.... இடம்பெயர்ந்து.... இடம்பெயர்ந்து... வாழ்ந்த காலப்பகுதிகளிலும் கூட உடல் உள உறுதியோடு இல்லறத்தை நல்லறமாகக் கொண்டு வாழ்ந்தவர். பேரப்பிள்ளைகளை அன்போடும் பாசத்தோடும் வளர்த்த பெருமை இவருக்குண்டு. இவரது பேரப்பிள்ளைகள் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு முன்னர் அன்னாரின் கால்களில் விழுந்து ஆசீர்வாதம் பெறுவதை நான் அறிவேன்.

இவர் தனது இறுதிக்காலத்தை இறைபணிக்காக அர்ப்பணித்து வாழ்ந்தார். தனது பேரப்பிள்ளைகளுக்காக மட்டுமன்றி, ஊரிலுள்ள இளையதலை முறையினர்க்காகவும் இறைவனை மனமுருகி வழிபடுபவர். ஊர் நலனுக்காக உழைத்த உத்தமர். அன்னாரது வாழ்வு பலருக்கும் ஒளி விளக்காக அமைந்துள்ளது. இவர் தனது வாழ்வில் செய்த அர்ப்பணிப்புகள் எமக்குப் பெரும் பாடமாக அமைந்துள்ளன. அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

திருமதி. பிறேமா மதுரநாயகம்
உதவிக் கல்விப் பணிப்பாளர்
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## சிவனடியார் அவலம்

அதிகாலை வேளையிலே
ஆண்டவன் சந்நிதியிலே
காண்டா மணியடித்து
எங்களைத் துயில் எழுப்பிடுவீர்கள்
புலர்வதன் முன் அலக்கிட்டு மெழுக்கிட்டு
பூக்கள் பறித்திடுவீர்கள்
பூசைக்கு உதவிடுவீர்கள்
மாதப் பிறப்புத் தொடக்கம்
மார்கழித் திருவம்பாவை வரை
உபயங்கள் அறிவிப்பீர்கள்
திருமணநாள், பிறந்தநாள் எல்லாம்
ஞாபகப்படுத்தி வாழ்த்திடுவீர்
பிரசாதம் கொண்டு எமக்கு
வீடு தேடி வந்திடுவீர்கள்
வீதியில் நடந்து வந்தால்
விருப்புடன் உம் வண்டியிலே
விடாது ஏற்றி வந்து இறக்கிடுவீர்
கோயிலில் தப்புச் செய்தால்
கோபத்துடன் கண்டிப்பீர்கள்
காலம் முடிந்ததுவோ
காலன் உமை அழைத்தானோ
சிவத்தொண்டின் மகிமையிலான்
சிவனடிதான் சேர்ந்தீரோ!

அறிவின் பெருமை அது சாதனைகள் மூலம் ஒளிவிடும் போது தான் மற்றவர்களுக்குப் புலப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

## மண்ணுலகில் வாழ்ந்த பெருமகன்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற தெய்வீகப் புலவர் திருவள்ளுவர் கூற்றுக்கு இணங்க இம் மண்ணுலகில் வாழ்ந்த பெருமகன் அமரர் மாரிமுத்து கந்தசாமி அவர்களின் திடீர் மறைவானது எம்மை ஆழ்ந்த கவலைக்கு உள்ளாக்கியது. எனினும் "பிறப்புண்டேல் யாவர்க்கும் இறப்பு உண்டு" என்ற உலக நியதிக்கு இணங்க அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"செய்வன திருந்தச் செய்" என்பது போல தன் கடமையைக் கண்கண்ட தெய்வமாகக் கொண்டு உருத்திரபுரீஸ்வரர் ஆலய முகாமையாளராக எமக்கு அளப்பரிய சேவையாற்றிய சமூக சேவகன். பலர் வந்து கடமையைச் செய்யாது கோவில் பணத்தையே சுரண்டிய போதும் இவர் கடமையில் கண்ணாக இருந்து ஆலய வளர்ச்சிக்கும் நிதி மேம்பாட்டிற்கும் பெரும் பங்காற்றியவர். கோயில் சொத்துக்களை எல்லாம் பொதுச்சொத்து என நினையாது தன் உரிமைப்பொருள் என்ற உள்ளத்தோடு சொத்துக்களைச் சேகரித்த கடமையாளன். இவரது பணிக்கு ஏதுவான நிகர் எமக்கு கிடைப்பது கடினமாகும். கடமையே கண்ணாக கொண்டு செயற்பட்ட இவர் தான் மட்டுமல்லாது தன் குடும்பத்தினரையே கோவில் பணியுடன் ஒன்றிக்கச் செய்து கடமையைப் புரிந்தமையானது மிகப்பெரிய சேவையாகும். கோயில் உபயகாரரை நினைவூட்டி அவர்கள் திருப்பணியைப் பெற்று உபயமளித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரசாத்தினை வீடுதேடிக் கொண்டு சென்று கொடுத்து கோவிலை நிதிக்கடனின்றி நடத்த உதவிய பெருமகன் என்றால் மிகையில்லை.

நேரகாலம் பாராது சிவப்பணி செய்து எவ்வித இடருமின்றி சிவனுடன் சேர்ந்து கொண்ட உத்தமன்.

"ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரே மாநிலத்தீர் - வேண்டா
நமக்கும் அது வழியே! நாம் போம் அளவும்
எமக்கென்னென் றிட்டுண்டிரும்"

அதனால் அவர் தம் பிரிவுக்காக எம் இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன் இவரது ஆத்மா உருத்திரபுரீசுவரனது திருவடியில் சங்கமமாகி நிலைத்து நிற்க ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தி. இராசநாயகம்,
தலைவர்,
உருத்திரபுரீஸ்வரர் ஆலய அறங்காவலர் சபை
உருத்திரபுரீஸ்வரர் ஆலயம்,
உருத்திரபுரம்.

**காலம்**

**நேற்று என்பது நீ செலவழித்து முடித்த பணம்**
**இன்று என்பது உன் கையில் உள்ள பணம்**
**நாளை என்பது உனது கைப்பையிலுள்ள பணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுப் பகிர்வு

12.10.2014 அன்று இறைபதமடைந்த கந்தசாமி அண்ணர் இறைபக்தியினையும், சிவத்தொண்டினையும் தன்பால் ஏற்று இறுதி வரையும் இறைவனின் சந்நிதியில் தரிசனம் செய்து அவனடியே சரணம் எனத் தஞ்சம் புகுந்துள்ளார். அன்னாரது வாழ்நாளில் ஏற்ற இறக்கங்கள் இருந்த போதிலும் தன் மக்களை அரச சேவைகளிலும், பொதுத் தொண்டுகளிலும் ஈடுபாடுள்ளவர்களாகவும் வளர்த்து வந்தார்.

முதுமை என்பது வயதால் நிர்ணயிக்கப்பட்ட போதிலும் இவரது சுறுசுறுப்பும் உத்வேகமும் எமை விட்டுத் திடீரெனப் பிரிந்தமை எல்லோர் மனங்களையும் ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. எம் முன்னோரைப் பேணிக்காப்பதும், பராமரிப்பதுவும் அவர்களின் பட்டறிவை எதிர்கால சந்ததியினருக்கு கடத்திச் செல்வதற்கும் முதியோரைப் பாதுகாத்தல் மிகமிக அவசியம். தற்காலச் சமூக அமைப்பில் இவ்வழக்கு அருகி வருவதை காணமுடிகின்றது. இது தொடர்ந்து கொண்டு போகுமாயின் சமூகம் பாரிய பின்னடைவை எதிர்நோக்க வேண்டிவரும். எனவே "முதியோர் நலன் ஓம்ப உழைப்போமாக"

சிவபதமடைந்த அன்னாரின் ஆத்ம ஈடேற்றத்திற்குப் பிரார்த்திப்பதோடு பிரிவுற்ற அன்னாரின் குடும்பத்திற்கும் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.ஐ.இராஜரட்ணம்
அதிபர்,
கிளி/சிவநகர் அ.த.க.பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிவதீபம் கந்தசாமி ஐயா

உருத்திரபுரீச்சரன், சிவாலயத் தொண்டன்
விருப்புடன் முகாமையாளர் பணிதனில் நல்ல
பொறுப்புடன் என்றும் கண்ணியம் கடமை
கட்டுப்பாட்டுடன் அருள்பணியாற்றியோன்.
மறுப்பிலா மனத்துடன் மாண்புடன் மகிமையாய்
மக்கள் பணியும் மகேசன் பணியதும்
சுறுசுறுப்புடன் வாலிபன் போல
சுதந்திரமாக சுத்த மனதுடன்
இறுதி வரையிலும் இறைபணியாற்றிய
இதய நாயகன் கந்தசாமி ஐயா

ஆனந்த விளக்கு, அணைந்திட வில்லை
ஏனிந்த மாயை, வாழ்க்கை எமக்கென
நானெனும் அகந்தை, மமதை அழித்து
நன்னெறி வாழ்வில் நாமும் புகுந்திட
தேனெனும் சிவனருளை சிந்தையில் மகிழ்ந்து
நாள் தோறும் சிவத்தொண்டுகள் புரிந்து
வாழ்வினில் இனிய வசந்தங்கள் கண்டு
நீள் சுக நிம்மதி நிரந்தரமென்று
நிமலன் திருவடி கணப்பொழுததனில்
கலந்தனன் ஒளியில்

வாழ்க்கையில் நிறைந்த நற்துணையோடு
ஆளுமை, ஆற்றல், அறிவு, நற்பாசம்
சூழ்ந்திடு தோழமை உறவுகளோடு
வாழ்ந்திடு பாசப்பக்குவம் பெற்ற
பார் புகழ் நல்ல பிள்ளைகளோடும்
ஆழ்ந்திடும் அன்பின் இல்லறம் கண்ட
அண்ணல், அமரர் சிவதீபம் ஐயா
ஊழ் வினை அகன்று உள்ளொளி பரப்பி
சிவத்தொண்டர்கள் வாழ்ந்த சோதியுள் கலந்தார்
ஆறுக ஆறுக அவரொரு தெய்வம்
அணையா அன்பு ஆனந்த விளக்கு
தேறுக தேறுக தேகம் அழியும்
ஆத்மா அழியாது
சாந்தியே சாத்தியம்.

கலா கணேசன்
உருத்திரபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் செய்தி

மானிட வாழ்க்கை என்பது வாழ்வாங்கு வாழ்வதற்கு உரியதாகும். இந்த வகையில் அவர்களுக்கான பெயர் சூட்டுதல் மரபாகும். சில வாழிடங்களைப் பொறுத்தவரையில் ஒரு பெயரைப் பலர் கொண்டிருப்பதும் அவர்களை அடையாளப்படுத்தும் வகையில் அப்பெயர்களுடன் சேர்த்து அடைமொழிகளையும் சேர்த்துக் கொள்வது தவிர்க்க இயலாததே.

இதுபோன்ற நிலையில் கந்தசாமி என்ற பெயரில் பலர் இருந்ததால் அமரர் கந்தசாமி அண்ணர் உருத்திரபுரம் குளக்கட்டின் அருகே குடிசை அமைத்திருந்து தோட்டங்கள் மற்றும் விவசாயச் செய்கையில் ஈடுபட்டு வந்ததால் குளக்கட்டு கந்தசாமி என்ற அடைமொழியுடன் அனைத்து மக்களாலும் அன்பாக அழைக்கப்பட்டார். சிறு பராயத்திலேயே தமது அயராத உழைப்பாலும் ஊக்கத்தாலும் வாழ்க்கையில் படிப்படியாக உயர்நிலையடைந்தார். தமது குடும்பத்தை நல்ல நிலையில் பராமரித்து வந்ததுடன் பிள்ளைகள் கல்வி கற்று உயர்வடைய வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் பிள்ளைகளைக் கற்க வைத்து மகிழ்வடைந்தார். பல தடவைகளில் பலவித இடையூறுகள் நேர்ந்த வேளைகளிலும் நிறுவனங்களிலும் தொழில்புரிந்து குடும்பத்தினர் நொந்து போகாது உழைத்து நின்றார்.

உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தில் முகாமையாளராக பொறுப்பேற்றுக் கொண்ட நாள் முதல் தமது கடமையை கண்ணும் கருத்துமாகச் செயற்படுத்தி வந்தார். காலம் தவறாமல் உரிய வேளையில் பணிபுரிந்து வந்ததுடன் நண்பர்கள், அயலவர்கள் மனம் நோகாத வண்ணம் சிறந்த நிருவாகியாகத் தமது வாழ்வை நெறிப்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை"

என்பதற்கேற்ப குடும்பம், பிள்ளைகள், ஆலயப் பணியில் அப்பழுக்கற்ற நிலையில் சிறப்புற்று விளங்கினார்.

எமது மூத்தோர் சங்க அங்கத்தவராக இணைந்து பங்காற்றிய இவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினரையும் ஆற்றுப்படுத்த இறைவனை வேண்டுகின்றேன்.

அ. இரகுபதி
(தலைவர்)
மூத்த பிரஜைகள் சங்கம்
சிவநகர்

## பயனுள்ள சில மருத்துவ குறிப்புக்கள்

மருத்துவம் என்பது நோய்களைக் குணப்படுத்துவதற்கான கலையும், அறிவியலும் ஆகும். இது மனிதர்களின் உடல்நலத்தைப் பேணுதல், மீள்வித்தல் போன்றவற்றிற்காக உருவாக்கப்பட்ட செயல்முறைகளை உள்ளடக்கும்.

1. வெந்தயம், சுண்டைக்காய் வத்தல், மிளகு தலா 50 கிராம் எடுத்து வறுத்துப்பொடி செய்து தினமும் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் உடல் எடை குறையும்.

2. முழு நெல்லிக்காய் 4, பச்சைமிளகாய் 2, வெந்தயம் சிறிதளவு மூன்றையும் சேர்த்து நன்றாக அரைத்துச் சாப்பிடுவதன் மூலம் ஜீரணக் கோளாறுகளுக்கு தீர்வு காணலாம்.

3. வெற்றிலையுடன் மிளகு மற்றும் பனங்கற்கண்டு சேர்த்துச் சாப்பிட்டால் தொண்டைப்புண் மற்றும் இருமல் குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலவரலாற்றுக் கடமைகளின் அடையாளம்...

"புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கிட்டு
பூமாலை புனைந்தேற்றி புகழ்ந்து பாடி"

என்னும் தமிழிசை பாடும் திருநாவுக்கரசரின் தேவாரத் தமிழடிகள் நினைவுகளாய் பூக்கின்றன.

நீண்ட வரலாற்றுச்சான்றுகளோடு பல்வேறு "சைவத்துவ விழுமியங்களை அடையாளம் காட்டும் தமிழ் பேரரசன் சோழனின் காலத்துக்கு முந்திய சைவத் தமிழ் கடவுளான உருத்திரபுரீச்சர சிவனின் அடிமையாகிய அமரர் கந்தசாமி அவர்களை அத்தேவாரத்தமிழோடு நினைக்க நினைவுகள் நீள்கின்றது.

சிவன் கோயிற்குளத்தின் எல்லைப் பகுதியில் வாழ்ந்த காலங்களில் இருந்து 2014.10.02ஆம் நாள் வரை வாழ்வின் அதிகமான நேரங்களை (காலங்களை) உருத்திரபுரீச்சர சிவனின் பெருங்கோவிலின் வாழ்வோடும் நித்திய பூசை, புண்ணிய கருமங்களோடும் தன்னை இணைத்தே வாழ்ந்தார். கோவிலின் நிர்வாக முழுமைகளில் குறைநிலைகள் ஏற்பட்ட நீண்ட காலங்களில் அடியவர், மக்கள் சமூக இணைவோடு கால நேர கோவிற் கடமைகளை நிறைவாகச் செயற்படுத்திய நிர்வாக முறைமைகள் கோவிலின் பின்னால் நிகழவிருந்த பல்வேறு தாக்கங்களுக்கு நீதியைப் பெற்றுத்தரும் ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்த பல்வேறு நிலைகளை நினைத்துப் பார்க்கின்றோம்.

பொருளாதார தடையின் மூலம் வன்னியை பட்டினி சாவுக்குட்படுத்த முனைந்த பெரும்பான்மை இனக்கோட்பாட்டு அரசியலுக்கு அடிபணியா முகங்கொடுக்கும் சுயதேவை பொருண்மிய வளங்களை உருவாக்கி தன்னிறைவுப் பொருளாதார உறுதி நிலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்திய அக்கால சமக்கார அமைப்பு நிர்வாகியாக செயற்பட்டு, சமூக அக்கறையாளராக உறுதியோடு செயற்பட்ட அன்றைய உயிர்ப்பு நினைவுகளை மீட்டுப்பார்க்கின்றோம்.

உருத்திரபுரம் பரந்து விரிந்த மக்கள் உறவோடான ஜனநாயக கிராமியப் பண்பார்ந்த கிராமம் பின் பல நிர்வாக கிராமங்களாக பிரிந்தும், உருத்திரபுரம் வடக்கு (எள்ளுக்காடு) கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராக 1976ஆம் ஆண்டு முதல் நான் செயற்பட்ட காலத்தில் உருத்திரபுரம் வடக்கு பிரிவு பல்வேறு கிராமங்களாக பிரித்து பதிவு செய்த போது 1988 இல் உருத்திரபுரீச்சரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தை உருவாக்கி தலைவராக திரு.ச.வரப்பிரகாசம் அவர்களையும் நிர்வாகத்தையும் உருவாக்கிய போது நிர்வாகத்தின் துணைச்செயலாளராக செயற்பட்ட அத்தொடக்க நிர்வாக காலங்களை நிறைவோடு நினைத்துப் பார்க்கிறோம்.

அமரர் தான் வாழ்ந்த சமூக வாழ்வோடு தனது பிள்ளைகளை கற்பித்தும் சமூக அக்கறையை தந்தும் வளர்த்தெடுத்த அடையாளங்களாக திருமதி.மஞ்சுளா மிகச்சிறுவயதிலேயே (1986) சர்வோதய சிரமதான அமைப்போடு இணைந்து ஊற்றுப்புலம் அரசினர் பள்ளியை அமைப்பதிலேயே எம்மோடு இணைந்து அக்கறை கொண்டதையும் கிராமிய அமைப்புக்களில் தலைமை தந்ததையும் ஆசிரியை துணை முதல்வராகி சிவநகர் பள்ளியின் வெளிச்சமாக ஒளிர்வதையும் மற்றைய பிள்ளைகள் கிராமிய மட்ட நிறுவன வழிகாட்டிகளாய் இருக்க வழிகாட்டியதையும் சமூகப் பொறுப்போடு உணர்ந்து பார்க்கின்றோம்.

1999களில் "சிவன்சோலை"க் கிராமத்தை உருவாக்கும் இலக்கோடு சிவன் கோவில் குளத்தை ஆழப்படுத்தல், முன்பள்ளி அமைத்தல், வீதிகள், பாலங்கள், உணவு உற்பத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வாதாரம் பற்றிய சிந்தனையை உங்களோடும் தம்பி சின்னவன், மார்க்கண்டண்ணர், நவம் சிவநகர் கிராமிய அபிவிருத்திச் சங்கம், கிராம சேவையாளர் அருந்தமிழ் செல்வன் ஆகியோரோடும் ஒன்றிணைந்து சிறப்பாக செயற்படுத்திய அந்த நாட்களை நினைத்து பார்க்கின்றோம்.

அமரர் கந்தசாமி அண்ணரின் குடும்பம் அவரது பிள்ளைகள், உறவுகள் உறவு நிலைக்குள்ளும், இலக்கு நிறை உறுதிகளோடு பண்பார்ந்து வாழ்வதை மன நெகிழ்வோடு நினைத்து பார்க்கின்றோம்.

வாழுகின்ற காலத்தில் தான் வாழ்ந்த சமூகத்துக்கு தன்னைத்தருவது மகத்தானது. அதன் அடையாளமாக அமரர். கந்தசாமி அவர்கள் நினைவுகள் மனித மனங்களில் என்றும் வாழும் நினைவுகளோடு........

நா.வைத்திலிங்கம் குகராசா (மணியண்ணா)
தலைவர்,
கரைச்சி பிரதேச சபை
கிளிநொச்சி.

### ✱ பயனற்ற ஏழு

ஆபத்துக்கு உதவாப்பிள்ளை
அரும்பசிக்கு உதவா அன்னம்
தாகத்தை தீரா தண்ணீர்
தரித்திரம் அறியாப் பெண்டிர்
கோபத்தை அடக்கா வேந்தன்
குருமொழி கொள்ளாச் சீடன்
பாவத்தை தீராத தீர்த்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பே சிவம் என்பதனை தன் வாழ்வின் ஊடாக வெளிப்படுத்தியவர் அமரர் மாரிமுத்து கந்தசாமி

அன்பே சிவம் என்பது சைவத்தத்துவம், அன்பே வாழ்வின் அடித்தளம் என்பது பௌத்த கோட்பாடு, உன் அயலவனையும் நேசி என்பது கிறிஸ்தவ வாழ்வின் நடை முறை.

அமரர் மாரிமுத்து கந்தசாமி எனது இளம் பராயம் தொடக்கம் மாற்றமே இல்லாத அன்புடனும் நட்புடனும் பண்புடனும் பழகிய ஒருவர். இவர் என்னுடன் மட்டுமல்ல தன் சக மனிதர்கள் எல்லோருடனும் ஏற்றத்தாழ்வின்றி மனிதநேயத்தை வெளிப்படுத்தியவர். தான் நம்பிக்கை வைத்திருந்த சிவநெறியை தன்னுடைய வாழ்வின் ஊடாக வெளிப்படுத்தியவர்.

சமூக நோக்குடைய நல்ல மனிதர், பாசமும் பொறுப்பும் நிறைந்த தந்தை என தன்வாழ்வின் செந்நெறியை சிறப்புடன் நிறைவு செய்த இவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உறவினர், மற்றும் உற்றார் அனைவருடனும் துயரைப் பகிர்ந்துகொள்வதோடு ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

அ. அன்ரன் அன்பழகன்
பிரதேச சபை உறுப்பினர்,
பச்சிலைப்பள்ளி,
பளை.

♠ வில்வம் பழத்தின் தோலை சர்க்கரை சேர்த்து சாப்பிட்டு வந்தால் குடல் சுத்தம் ஆகும்.

♠ வில்வ மரத்தின் பூக்களை உலர்த்திப் பொடி செய்து தேனில் கலந்து குடித்தால் வயிறு மந்தம் குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நீங்கா நினைவுகளுடன்.....

ஊர்போற்ற உருத்திரபுரத்தில் வாழ்ந்த மாரிமுத்து கந்தசாமி அவர்கள் நேர்மையும் நற்பண்பும் உடையவராக சிறப்புடன் வாழ்ந்து வந்தார். இடம்பெயர்ந்து அக்கராயன் 8ம் கட்டையில் இருந்த போது இவரோடும் இவரது குடும்பத்தோடும் எனக்கு நெருக்கமான உறவு ஏற்பட்டது. இவர் பொதுப்பணியில் மண்பற்றோடு செயற்பட்டவர்.

இவர் ஒரு சிறந்த சிவபக்தர். உருத்திரபுரம் சிவாலயத்தில் முகாமையாளராக இருந்து புனிதமான சேவையாற்றி பின் புதிதாக வந்த நிர்வாகத்திற்கு தன் பொறுப்புகளைக் கையளித்து புனித நிலையிலே இறைபதமடைந்தார். சிவனைப் போற்றிச்சிவனோடு வாழ்ந்து சிவபதமடைந்து விட்டார்.

"அரிது அரிது மானிடப் பிறவி அரிது", அந்த மானிடப் பிறவி எடுத்த தற்கேற்ப வாழ்ந்து காட்டிய மாமனிதன். இவர் எம்மைவிட்டுப் பிரிந்தாலும் இவரோடு பழகிய நினைவுகள் எம்முடன் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கும். இவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல உருத்திரபுரீஸ்வரர் அருள்புரிய வேண்டுகின்றேன்.

"வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்"

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சு. பசுபதிப்பிள்ளை,
ஓய்வுபெற்ற கிராம அலுவலர்
திருநகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிளிநொச்சியின் நினைவுகளில்
# கந்தசாமி ஐயா

கிளிநொச்சி மண்ணின் முகிழ்ப்பின் காலங்களில் காடுகள் வெட்டிகளனியாக்கி மண்ணை பொன்னாக்கிய மனிதர்களில் மறைந்த மாரிமுத்து கந்தசாமி அவர்களை மறக்க முடிவதில்லை. ஊர்காவற்றுறை சுருவிலில் பிறந்து கிளிநொச்சி மண்ணில் குடியேறி இந்த மண்ணில் பற்றோடும் பாசத்தோடும் எல்லா காலங்களிலும் வாழ்ந்து போயிருப்பவர் சந்தசாமி ஐயா அவர்கள். இம்மண்ணிற்குரிய ஒரு கமக்காரராகவும் சமூக அக்கறையுள்ள மனிதராகவும் இறுதிவரை அவர் வாழ்ந்துள்ளார். இன்று சிறந்து விளங்கும் கிளிநொச்சியின் மூத்த பாடசாலைகளில் ஒன்றான கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியின் பழைய மாணவர் இவர். அது மட்டுமன்றி ஈழத்தின் புகழ்பூத்த ஈச்சரங்களில் ஒன்றான உருத்திரபுரீச்சரம் சிவன் ஆலயத்தின் முகாமையாளராக பக்தனாக அந்த ஆலயத்தின் வளர்ச்சியில் பங்காளனாக இருந்து வந்துள்ளார் என்பது இங்கு அவர் பற்றிய நினைவுகளில் மிக முக்கியமானது. இம்மண்ணில் பிறந்ததன் பயனை சிறந்த அறிவுள்ள பிள்ளைகளை ஈன்றதுடன் நல்லதொரு குடும்பத்தலைவனாகவும் எங்கள் மத்தியில் வாழ்ந்திருப்பது பெருமைக்குரியது. அமரர் மாரிமுத்து கந்தசாமி அவர்கள் கிளிநொச்சி மண்ணின் அழகிற்குரிய ஒருவராக இம்மண்ணின் நினைவுகளில் என்றென்றும் நிலைத்திருப்பார். அவரின் ஆத்ம சாந்தியடையவும் அவரின் பாசமிக்க இல்லத்துணைவியார், பிள்ளைகளின் மனம் அமைதி பெறவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

சிவஞானம் சிறீதரன்
பாராளுமன்ற உறுப்பினர்
யாழ் தேர்தல் மாவட்டம்
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்

**"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

மனித வாழ்வில் மரணம் என்பது தவிர்க்க முடியாத ஒன்று. இப்பூமியில் பிறக்கும் எல்லோருக்கும் மரணத்தின் தேதி குறித்தே வைக்கப்படுகின்றது. இரகசியமான அத்தேதி ஆளுக்காள் வேறுபடுகின்றது. அந்த வகையில் இறைபணிக்காகத் தன் இறுதி வாழ்வை அர்ப்பணித்து அமரத்துவம் அடைந்த உயர்திரு. மாரிமுத்து கந்தசாமி அவர்கள் இவ்வூரின் பெருமைக்குரிய உருத்திரபுரீஸ்வரத்தான் தாள்களை எண்ணியாங்கு சேவையுறு வேளை இறைவனைத் துயிலெழுப்பிவிட்டுத் தான் இவ்வளவு வேகமாக நிரந்தரத் துயில் கொள்வாரென்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

குளக்கட்டுக் கந்தசாமி அண்ணையென்று சிறுவயதில் நானறிந்தவர். வறுமையிலும் தன் பிள்ளைகளை செவ்வனே வளர்த்து நானிலம் போற்றும் நன்மக்களாய் இவ்வூருக்குத் தந்த செம்மல் உழைப்பிற்கு உறுதுணையாய் உற்ற நல் மனையாளும் உதவியாகி உயர்ந்தவர். கணக்கெழுதும் திறனில் கைதேர்ந்தவர். இவரது கையெழுத்தா? இதுவென்று எண்ணியெண்ணியே பல தடவை இவர் கையெழுத்தைப் புரட்டிப் பார்த்த சிறுவயது என் ஞாபகங்கள் மீண்டும் வருகின்றது. அமைதியோடு சேர்ந்த அழகுறு உருவம்.

சிவனின் திருவருட் பணிக்காக சிவநகர் பதிதோறும் தரிசனம் செய்யும் இவர் சேவை போதுமென்று உருத்திரபுரீச்சரத்தானும் நினைத்து விட்டான் போலும். மெல்லெனத் தென்றல் வருடும் அதிகாலைப் பொழுதில் ஆண்டவன் திருவடியில் ஆசிவேண்டி இவ்வுலக வாழ்வின் பயணத்தை முடித்துக் கொண்டாலும் அவரது அமைதியான தோற்றமும் ஆண்டவனுக்கான சேவையும் என்றும் மறக்க முடியாதவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்பதற்கமைய தெய்வத்தின் திருவடி சேர்ந்த கந்தசாமி அண்ணையின் பிரிவு ஜீரணிக்க முடியாதெனினும் "வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்த" இவரை இறைவனின் திருவடியில் உள்ளாரென உள்ளத்திருத்தி அமைதி பெறுவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திருமதி. மீனலோஜினி இதயசிவதாஸ்
அதிபர்
கிளி/உருத்திரபுரம் ம.வி

## மருத்துவக் குறிப்புக்கள்

01. குப்பைமேனி — சிறுநீர் நோய்களுக்கு இதன் இலைச்சாற்றில் தேன் கலந்து பருகவும். பூனைக்கடிக்கு இதன் இலையையும் முள்ளம்பன்றிக் கூரையும் கரியாகும் படி ஓட்டில் வறுத்தெடுத்து பசு நெய்யில் அரைத்துப் பூசவும்.

02. நொச்சி — மூட்டு வலிகளுக்கு நொச்சியிலை, ஆடாதோடையிலை, ஆமணக்கிலை, வெள்ளைப்பூடு, ஆகிய ஒவ்வொன்றையும் சமஅளவு எடுத்து இடித்துபொட்டணி கட்டி நீராவியில் அவிக்கவும் பின் வலியுள்ள இடத்தில் ஒத்தடம் கொடுக்கவும். தலையிடிக்கு நொச்சியிலைச் சாற்றையும் நல்லெண்ணையையும் சம அளவிட்டுக் கொதிக்க வைத்துஆறிய பின்னர் 5 துளிகளை மூக்கினால் உறுஞ்சவும்.

*"வாழ நினைப்பவனுக்கு வானம் கூட வாயிற்படி தான்"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவினிலே...

கந்தனின் நாமங்கொண்ட கந்தசாமி அண்ணையைப் பற்றிக் கூறுவதென்றால் வார்த்தைகள் இல்லை. சிரித்த முகத்துடனும் அம்மா என்ற சொல்லுடனும் பணிவன்புடன் எமை நோக்கும் அந்த முகத்தை மறப்பதற்கில்லை. 71 வயதிலும் 17 வயது இளைஞனைப் போலே நுளம்பு மோட்டார் சைக்கிளில் அவர் செல்லும் காட்சியும் சிவ ஆலயத்திலே முகாமையாளராகக் கடமையாற்றும் கண்ணியமும் மறக்க முடியவில்லை. குடும்பத்தில் நல்ல தலைவனாக மனைவிற்கு நல்ல கணவனாக பிள்ளைகளிற்கு நல்ல தந்தையாக நல்லதோர் சிவத்தொண்டனாக தொண்டுகள் பல செய்து நின்ற கந்தசாமி அண்ணை 12.10.2014 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திருமதி. சாரதாம்பாள் சுந்தரலிங்கம்
கிராம அலுவலர்
சிவநகர்.

## சிந்தனைக்கு சில..!

அடிக்கடி தவறு செய்கிறவன் அப்பாவி. ஒரு தவறை திரும்ப திரும்பச் செய்கிறவன் மூடன். ஒரு தவறுமே செய்யாதவன் மரக்கட்டை. தன்னையறியாமல் தவறு செய்து தன்னையறிந்து திருத்திக்கொள்கிறவனே மனிதன்.

காலை நேரம் எப்படி தோன்றுகிறதோ மாலை நேரமும் அப்படியே தோன்றுகிறது. விடியும் பொழுதிற்கும் முடியும் பொழுதிற்கும் தோற்றத்தில் வேறுபாடில்லை. இன்ப துன்பங்களையும் அப்படியே நினைத்து விடு. எந்தக் கட்டத்திலும் நீ அழ வேண்டிய அவசியமிருக்காது.

"வெற்றி பெற்ற மனிதனாக வாழ்வதை விட உபயோகமுள்ள மனிதனாக வாழ முயற்சி செய்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமது குடும்பத்தலைவரின் பிரிவுத் துயரில் கலந்து கொண்டு தங்களின் அஞ்சலிகளை துண்டுப்பிரசுரங்களாகவும் பதாதைகளாகவும் மலர் வளையங்களாகவும் நினைவுரையாகவும் சமர்ப்பித்து துயர் பகிர்ந்த அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

1. தலைவர் தி. இராசநாயகம்,
அறங்காவல் சபை உறுப்பினர்கள்,
உருத்திரபுரீஸ்வரர் ஆலய அறங்காவல் சபை,
உருத்திரபுரீஸ்வரர் ஆலயம், உருத்திரபுரம்.

2. தலைவர் தி. இராசநாயகம், பணிப்பாளர்கள்,
இல்லக்குழந்தைகள்,
மகா தேவா ஆச்சிரம சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

3. ஆலய அறங்காவலர் சபை சிவாலயம்
உருத்திரபுரீஸ்வரர், உருத்திரபுரம்.

4. அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள்
கிளி / சிவநகர் அ.த.க.பா

5. அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள்
கிளி / உருத்திரபுரம் மகா வித்தியாலயம்

6. அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள்
கிளி / புனித திரேசா பெண்கள் கல்லூரி

7. உழவர் ஒன்றியம் விளையாட்டுக்கழகமும்
சனசமூக நிலையமும்

8. உருத்திரபுரம் விளையாட்டுக்கழகமும் சனசமூக நிலையமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. கிராம அபிவிருத்திச் சங்கம், உருத்திரபுரம் கிழக்கு, உருத்திரபுரம்.

10. மூத்த பிரஜைகள் சங்கம் சிவநகர்

11. யோகானந்தன் காந்தினி பெறாமகள்

12. திரு. இ. பரஞ்சோதி ஆசிரியர்

13. திரு. நா.வை. குகராசா தவிசாளர் பிரதேச சபை கரைச்சி, கிளிநொச்சி.

14. திரு.அ.விக்னேஸ்வரராசா - கமக்கார அமைப்பு

## மூன்றால் முன்னேற .........

| | | |
|---|---|---|
| தவிர்க்க வேண்டிய மூன்று | - | புகைத்தல், குடித்தல், சூதாடல் |
| அடக்க வேண்டிய மூன்று | - | நாக்கு, கோபம், ஆசை |
| ஒழிக்க வேண்டிய மூன்று | - | திருட்டு, பொய், சோம்பல் |
| ஆதரிக்க வேண்டிய மூன்று | - | வாக்குறுதி, நட்பு, அன்பு |
| மதிக்க வேண்டி மூன்று | - | முதியோர், மார்க்கம், சட்டம் |
| போற்ற வேண்டிய மூன்று | - | தைரியம், மனமகிழ்ச்சி, திருப்தி |

## மனித தர்மம்

| | | |
|---|---|---|
| கோபத்திலும் | - | பொறுமை |
| ஏழ்மையிலும் | - | நேர்மை |
| தோல்வியிலும் | - | விடாமுயற்சி |
| தரித்திரத்திலும் | - | பரோபகாரம் |
| துன்பத்திலும் | - | தைரியம் |
| செல்வத்திலும் | - | எளிமை |
| பதவியிலும் | - | பண்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கந்த சஷ்டி கவசம்

**காப்பு**

**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள்
கந்த சஷ்டி கவசந் தனை.

**குறள் வெண்பா**

**அமரரிடர் தீர அமரம் புரிந்த**
**குமரனடி நெஞ்சே குறி நூல்**

**நிலைமாண்டிய ஆசிரியப்பா**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்க என்று வந்து
வரவர வேலா யுதனார வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண்டு ஆயதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு டிலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெறறென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈர்ராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல் பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர் ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டிகுடிகு டிகுடிகு டங்கு டிங்கு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோத னென்
உன் திருவடியை உறுதி என்று எண்ணும்
என்றெலை வைத்துன் இணையடிகாக்க
என் உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர் வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேர் இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரெண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் ளிருக்க
நாவில் சரஸ்வதி நற்துணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்கா
எப்பொழு தும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடியட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வாலாஷ் டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியம்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ஷதரும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் ளென்பும்
நாகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஓட்டியப் பாவையும் ஒட்டியச் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூ தாணெனைக் கண்டாறகலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கண்டுடனாங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணல்ஏரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டு அதுஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விஷயங்கள் எளிதுடனிறங்க
ஒளிப்பும சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்க உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாக
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவயொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
காத்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துஉறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரர் குழலாள் கலைமகள் நன்றாய்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் குடியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்து தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட ன்நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக்கொண்டு
ஓதியே: செவித்து உகந்துநீ றணிண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் தருளுவரை
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நாவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டடாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாயக் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் – சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத்தேழிவர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும் சின்னக்
குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் ரரசே
மயில்நடமிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவ ஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்

முற்றிற்று
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஔவையார் அருளிய
# விநாயகர் அகவல்



சீதக்கபளச்செந்தாமரையும்
பாதச்சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரைஞானும் பூந்துகிலாடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழைவயிறும் பெரும்பாரக் கோடும்
வேழமுகமும் விளங்கு சிந்தூரமும்
ஐந்து கரமும் அங்குபாசமும்
நெஞ்சி குடிகொண்ட நீல மெனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச்சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியுந்
திரன்ட முப்பரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரு மூஷிக வாகன
இப்பொழுதென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந்தருளி
மாயாப்பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவா
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடிவாகிக் குவலையந்தனில்
திருவடி வைத்துத்திறமிது பொருளென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடாவகைதான் மகிழ்ந் தெனக்கருளிக்
கோடாயுதத்தாற் கொடுவினைகளைந்தே
உவட்டாவுபதேம் புகடடியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவினையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்குமுபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளி
கருவிகளொடுங்கும் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந்தந் தெனக்கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக்கதவை அடைப்பதுங்காட்டி
ஆறாதாரத்துஅங்குச் நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரையறுத்தே
இடையிங்கலையின் எழுத்தறிவித்து
கடையில் இழு முனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூனின்
நான் றெழுபாம்பின் நாவிலுணர்த்தி
குண்டலியதனிற் கூடியஅசவை
விண்டெழ மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக்
காலாலெழுப்புங் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தனியக்கமும்
குமுதசகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையும் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்முகமாக இனிதெனக்கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக்களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்து
இருவெளியிரண்டும் கொன்றிட மென்ன
அருள்தரும் அனைத்து அழுத்தியென் செவியில்
எல்லையில்லா ஆனந்தமழித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்செ
சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணு விற்கணு வாய் அப்பாலுக்கப்பாய்க்
கணு முற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாய்துடன் கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயகர் விரைகழல சரணே

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு கட்டும்போது கவனிக்க வேண்டிய வீட்டின் நீள, அகலம்**

07 அடி - எண்ணங்கள் நிறைவேறாது தடைப்படும்.
08 அடி - எண்ணிய காரியம் நிறைவே, செல்வம் சேரும். பகை இருக்காது.
09 அடி - குடும்பத்தில் பிரச்சினை சலிப்புக்கள் உண்டாகும்.
10 அடி - பசு, தன தானிய விருத்தி.
11 அடி - தீவினைகள் அணுகாது, வேளாண்மை விருத்தி.
13 அடி - காரியத்தடங்கல், உறவினர் பகை.
14 அடி - வாழ்வில் துன்பங்கள் துயரங்கள் நேரிடும்.
15 அடி - வறுமை நோய்கள் ஏற்படும்.
16 அடி - மக்கட்பேறு, தனம்சேரும், மேன்மையான வாழ்வு
17 அடி - இறைவன் அருள்பாலிப்பார், அசரமதிப்பு, எதிரிகள் இருக்காது.
18 அடி - பலவகையான துன்பங்கள் வந்து சேரும்.
19 அடி - மனைவி மக்கட்கு பேறு துன்பங்கள் ஏற்படும்.
20 அடி - பொருள் வரவு மக்கட் பேறு மகிழ்ச்சி உண்டாகும்.
21 அடி - துன்பம் அணுகாது பால்பாக்கியம் பெருகும்.
22 அடி - பகைவர் அஞ்சுவர் மகிழ்ச்சியான வாழ்வு குழந்தைச் செல்வம் உண்டு.
23, 24,25 - நோய், விரோதம், ஆயுட்குறைவு ஏற்படும்.
26 அடி - செல்வச் செழிப்பு சந்திரனைப்போல் வாழ்வு
27 அடி - வேளாண்மை விருத்தி உலகம் போற்றும் வாழ்வு.
28 அடி - பகைவர்கள் அஞ்சுவார்கள் செழிப்போடு நிறைவான வாழ்வு.
29 அடி - சகல செல்வமும் பெருகும்
30 அடி - மக்கட்பேறு, செல்வச் சிறப்பு
31 அடி - இறைவன் திருவருள் கிடைக்கும்
32 அடி - இறைவன் திருவருள் கிடைக்கும்.
33 அடி - குடும்பம் சிறப்படையும்
34 அடி - துன்பம் பிணி உண்டாகும்
35 அடி - செல்வம் பல வழிகளில் சேரும்
36 அடி - அரச பதவி கிடைக்கும்
37 அடி - இன்பசுகம் நல்வாழ்வு உண்டாகும்
38 அடி - துன்பம், பிணி உண்டாகும்
39 அடி - இன்பசுகம் நல்வாழ்வு உண்டாகும்
40 அடி - அலுப்பு, சலிப்பு, சோர்வு உண்டாகும்
41 அடி - குபேரனைப் போல் வாழ்வார்
42 அடி - செல்வம் அனைத்தும் நிலையாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது
குடும்பத்தின் தலைவனாய்
இருந்து எம்மை வாழ வைத்த
தெய்வம் சிவனடி சேர்ந்த செய்தி
கேட்டு உடன் ஓடி வந்து உதவிய உற்றார்,
உறவினர், நண்பர்களும் உள்நாட்டில்
இருந்தும், வெளிநாட்டிலிருந்தும்
தொலைபேசி மூலம் துயர்
பகிர்ந்தோருக்கும் அன்னாரின் இறுதிக்
கிரியைககளுக்கு பல்வேறு வழியிலும்
உதவிய அன்புள்ளங்களுக்கும் இறுதிக்
கிரியைகள், அந்தியேட்டிக் கிரியை
என்பவற்றை சிறந்த முறையில்
செவ்வனே செய்து தந்த குருக்களுக்கும்
இம்மஞ்சரியை அழகுற அச்சடித்துத்
தந்த அச்சகத்தினருக்கும்
குடும்பத்தவர்கள் சார்பாக
மனப்பூர்வமான
நன்றிகள்.

**74/1, சிவநகர்,**
**உருத்திரபுரம்.**

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளின்

♣ மாரிமுத்து + ♣ ஐயாத்தை

↓

♣ பாக்கியம் ♣ விசுவலிங்கம் ♣ பூரணம் மார்க்கண்டு புஸ்பம்

↓

**கந்தசாமி** ♣ கைலாயபிள்ளை ♣ பொன்னுச்சாமி சோமசுந்தரம்

↓

| | | | | |
|---|---|---|---|---|
| மஞ்சுளா<br>+<br>யோகநாதன்<br>↓<br>சதனிகா<br>தசனிகா<br>பவனிகா | ஸ்ரீதரன்<br>+<br>பத்மலோஜினி<br>↓<br>ரதுநிலன்<br>டிலக்சி | சுகந்தி<br>+<br>சதானந்தன்<br>↓<br>லாவண்யா<br>எழிலருவி<br>திகழினி<br>திகழருவி | நளாயினி ♣ | சர்மிளா ♣ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ின் சங்கமம்

♣ கந்தையா + ♣ தங்கமுத்து

♣ நவமணி ♣ செல்வராசா புவனேஸ்வரி பகவதி

சந்திரலேகா பரமேஸ்வரி ♣ விமலராணி விமலதாசன்

♣

குமுதினி + நிருபாகரன் → தாட்சாயினி, துவாரகா

சிறிகரன்

தர்சினி + மயூரன் → பிரமிஷா

ஜனார்த்தனி + அருளானந்தம்



♣ அமரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவம் என்பதே அறிவு



பிறப்பில் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்
அன்பெனப்படுவது யாதெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்
பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்
மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்
வறுமை என்பது யாதெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்
இறப்பின் பின்னது யாதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்.

அனுபவித்தே தான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவனே நீ ஏன் எனக் கேட்டேன்
ஆண்டவன் சற்று அருகில் நெருங்கி
அனுபவம் என்பதே நான் தான் என்றார்.

- கவிஞர் கண்ணதாசன் -



வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org